| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2026 | |
| CC No. 28/2024 | |
| சாட்சி :PW5 | |
| பெயர் : திரு. திருமுருகேசன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சின்னச்சாமி | தொழில் : காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 50/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வையம்பட்டி காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.குடுமிநாதன், அவர்களை எங்களது காவல்நிலையத்தில் பணிபுரிந்த வகையில் தெரியும். காவல் உதவி ஆய்வாளர் குடுமிநாதன் தற்போது பணிமாறுதல் பெற்று வேறுமாவட்ட காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரது கையெழுத்துகள் மற்றும் எழுத்து நடை உள்ளிட்டவை எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் இவ்வழக்கில் காலம்விரயத்தை தவிர்க்கும் பொருட்டு இவ்வழக்கின் நீதியின் நலன் கருதி அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.11.2023 அன்று இரவு 08.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் குடுமிநாதன் அவர்கள் வையம்பட்டி காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது மணப்பாறை சிந்துஜா மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மரியரூபெல்லா என்பவரிடம் பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வையம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 516/2023 u/s. 294(b),324 இதச ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணக்கு எடுத்துக்கொண்ட அவர் சம்பவ இடமான மரியரூபெல்லா என்பவரின் வீட்டு அருகே சென்று மறுநாள் காலை 07.00 மணியளவில் சாட்சிகள் ராபர்ட்அகஸ்டின், மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார்.

இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி ஜார்ஜ்ஸ்டீபன்ராஜ் குற்றம் புரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரியை காரணம் கூறி கைது செய்து 26.11.2023 அன்று தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார். இவ்வழக்கில் காயமடைந்த மரியரூபெல்லா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மகாலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் காயமடைந்தவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என வழங்கிய காயச்சான்றிதழை பெற்றுள்ளார். சாட்சிகள் மற்றும் புலன் விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை u/s. 294(b),324 இதச லிருந்து u/s. 294(b),326 இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். இவ்வாறாக புலன் விசாரணை முடித்து 02.12.2023 அன்று எதிரிக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **புகார், முதல் தகவல் அறிக்கை, மாதிரி வரைபடம், பார்வை மகசர், விபத்து பதிவேட்டு மற்றும் காயச்சான்றிதழ் , சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை முறையே அ.சா.ஆ. 3 முதல் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.1, ஆஜர் எதிரி கணவன், மனைவி என்றால் சரிதான். இருவருக்கும் கருத்துவேறுபாடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாக்கியதாக சொல்லப்படும் கட்டையை விசாரணை அதிகாரி கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மை இல்லை என்பதால் தான் வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் உண்மை இல்லை என்பதால் தான் சாட்சிகள் போலீசார் விசாரணைக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல்நிலையத்தில் இருந்து தயார் செய்து எதிரிக்கு எதிரான ஒரு பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.